1967 ஜூலை 11] [திரு. கே. ஏ. மதியழகன்]

அதே சமயத்தில் பதுக்கியுள்ள இருப்புகளை வெளிக்கொண்டு வருவதன் மூலமும் பிற மாநிலங்களுக்கு அரிசி எடுத்துச் செல்லப் படாத வகையில் இம்மாநில எல்லைகளை மூடுவதன் மூலமும் வெளிச் சந்தையில் மக்கள் உபயோகத்திற்காக அதிக அளவு உணவுப் பொருளகள் கிடைக்கச் செய்ய திட்டவட்டமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியிருந்தது.

THIRU K. VINAYAKAM: On a point of clarification, Sir, this note having been printed and circulated and also having been assimilated by the Members, I think it will save the time of the House if the Hon. Minister does not continue to read it further.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : கனம் சபாநாயகர் அவர்களே, உணவுப் பொருள்கள் வழங்குவது குறித்து இந்த அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்த இந்தக் கொள்கைக் குறிப்பு அச்சடிக்கப்பட்டுக் கனம் உறுப்பினர்களுக்குக் கொடுக் கப்பட்டிருந்தாலும், அதையே என்னுடைய இந்த மானியக் கோரிக்கையைக் குறித்த முன்னுரையாக நான் படிக்க விரும் பியது, அது இந்த சட்டப் பேரவையின் அதிகார பூர்வமான பதி வேட்டில் பதிவாக்கப்படவேண்டும் என்பதற்காகத்தான். இந்த அரசாங்கத்தினுடைய உணவுக் கொள்கையைப்பற்றியும், 120 நாள் சாதனைகளைக் குறித்தும் இதிலே நான் விவரமாகக் குறிப்பிட்டிருக் கிறேன். கனம் உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டபடி, இதைப் படிப்பதற்குச் சற்று நேரம் ஆகக்கூடும் ஆதலாலும், இந்த மன்றத் தின் விலைமதிக்க முடியாத நேரத்தை அதிகம் எடுத்துக்கொள்ளக் கூடாது என்ற காரணத்திற்காகவும், இந்த என்னுடைய குறிப்பு முழுவதையுமே மன்ற நடவடிக்கைகளில் வெளியிடத்தக்க ஒன்றாகக் கருதிக்கொள்ளவேண்டும் என்று, கனம் சபாநாயகர் அவர்களே, தங்களை நான் கேட்டுக்கொள்ளுகிறேன். இந்தக் குறிப்பில் அடங்கியுள்ள விவரங்களைக் கனம் உறுப்பினர்கள் அறிந்துகொள்ளுவது இந்த விவாதத்தை மேலும் பயனுள்ளதாக ஆக்கும் என்ற காரணத்தாலும் இதை நான் படிக்க விரும்பினேன். ஆகவே, இந்தக் குறிப்பின் பிற பகுதிகளும் அதிகாரபூர்வமான வெளியீட்டில் சேர்த்துக்கொள்ளப்பட்டுவிட்டதாக நான் கருது கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. விநாயகம் அவர்கள் சொன்னபடி, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய குறிப்பு முழுவதையுமே படித்துவிட்டதாக நாம் கருதிவிடுவோம். ஆனால், பின்னால் ஒரு முறை அமைச்சர் அவர்கள் இதிலே இருக்கிறது என்று சுட்டிக்காட்ட வேண்டிய நிலைமை இல்லாமல் பார்த்துக் கொள்ளவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : சென்ற ஆண்டில் சிறு தானியங்கள் குறித்து கொள்முதல் வேலை மேற்கொள்ளப் பட்டிருப்பினும் இந்த ஆண்டில் சிறு தானியங்களைக் கொள்முதல்